1971 டிசம்பர் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவாவர்களே, அக் குளத்தில், ஆண்டுதோறும் தெப்போற்சவம் நடைபெறுகிறது. எனவே, தெப்போற்சவத்திற்கு அது பயன்படுகிறது. எதற்கும் பயன்படவில்லை என்று சொல்வது தவறு.

திருமதி த. ந. அனந்தநாயகி : குளத்தை வெட்டுவது கஷ்டம். தூர்ப்பது எளிது. வெட்டப்பட்ட குளங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல், தண்ணீர் வரத்துக்கள் அடைக்கப்பட்டிருக் கின்றன. எல்லாக் குளங்களையும் தூர் வாரி, செப்பனிடப்பட்டு, தண்ணீர் வரத்துக்கள் சரியான முறையில் திறந்துவிடப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படி எந்த எந்தக் குளங்கள் செப்பனிடப்படாமல் இருக்கின்றனவோ. அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, தூர் எடுத்து. தூய்மைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

கோவை, திருப்பூர் நகரங்களுக்குப் பால் வழங்கல்

* 343. **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் குறைந்த விலைக்கு நல்ல பால் தரும் திட்டத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : கோவை, திருப்பூர் போன்ற நகரங்கள் தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற பகுதி, அங்கே சத்து உணவுத் திட்டத்தின்கீழ் உணவுப் பொருள் வருவதுபோலவே கோயம் புத்தூர், திருப்பூர் போன்ற இடங்களில் மலிவான விலையில் பால் கொடுக்க முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மலிவான விலையில் பால் வழங்குகிற திட்டம் மதுரையில் செயல்பட்டு வருகிறது. யுனிசெப் மூலம் இயந்திரங்களை வாங்கி அங்கே வைத்திருக்கிறோம். அவர்கள் இயந்திரம் கொடுக்கும்போது போட்ட விதிக்கிணங்க அங்கே மலிவுவிலையில் பால்வழங்கப்படுகிறது. ஆனால் கோவை, திருப்பூர் போன்ற இடங்களில் இப்போது உள்ள இயந்திரங்களே போதுமானதாக இருக்கிறது. ஆகவே யுனிசெப் உதவியை நாடுவதாக இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதியில் பால் அதிகமாக உற்பத்தியாகிறது. அந்தப் பாலை சரியான முறையில் வாங்குவதற்கு வியாபாரிகள் இல்லாததால் அரசாங்கமே மில்க்போர்டு அமைத்து அதன்மூலம் அங்கு உற்பத்தியாகிற பாலை வாங்க முன்வருவார்களா?

[1971 டிசம்பர் 13

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: காங்கேயம், ஈரோடு பகுதியில் உற்பத்தியாகிற பாலை ஈரோடு டயரிக்கு சேர்த்து சென்னைக்குக் கொண்டு வருகிறோம். மேலும் அங்கே அதிக உற்பத்தி இருந்தால் அவற்றையும் வாங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகை கூட்டுறவு பாலை சென்னைக்கு அனுப்பிவந்தார்கள். இவர்கள் வாங்காததால் அங்கே ஆயிரக்கணக்கான லிட்டர் பாலை கொட்டிவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனிக் கேள்வி போடவும்.

THIRU K. M. SUBRAMANIAM : When this country, particularly, Tamil Nadu is facing shortage of milk and the per capita consumption is so low how can the Hon. Minister say that there is excess of milk? It may be that the price is so high that the poor people are not able to buy it. Can I have an explanation on this?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு பால் வாங்குகிற மக்கள் இருக்கிறார்களோ, அந்த அளவுக்குமேல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதிகமான மக்கள் வாங்க முன்வந்து தேவை அதிகப்படுகிற நேரத்தில் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்தும்

சுதேசமித்திரன் பத்திரிகை மூடப்பட்டதும் அதனால் ஏற்பட்ட வேலையின்மையால் அவதியுறும் தொழிலாளர், செய்தியாளர் நிலை குறித்தும்.

MR. SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Assembly Rules Thiru R. Ponnappa Nadar has given notice of a motion for the adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely :—

" The closure of the 'Swadesamitran' Press since November 10th 1971 and the consequent hardship of unemployment caused to several working journalists and other press workers."

Thirumathi T. N. Anandanayaki has also given notice of a similar motion.

I now call upon Thiru R. Ponnappa Nadar to explain briefly how it comes under an adjournment motion.